சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்: பிரமாதீச ஞு பங்குனிமீ ௨0-உ வெள்ளிக்கிழமை (12-4-1974) [இல: ௨

# மங்கல வாழ்த்து எங்கணும் ஒலிக்க

## ஆனந்த ஆண்டு அமையும் அமையம்

பங்குனி 31 பூராடம் இரண் பாதம், சனிக்கிழமை இரவு 9-50 மணி ஆண்டு ஆரம்பம்.

விசேட புண்ணியகலம்: சனிக்கிழமை பங்குனி 31 (13-4-74) மாலை 5-49 தொடக்கம் 1-49 வரை

சங்கிரம தோஷ நாள்: பரணி கார்த்திகை 2, 3, 4 பாத ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 பாதம், பூரம், மூலம், பூராடம், உத்தராடம் 1 பாதம். மருத்து நீராடல் அவசியம்.

## கதிரமலைச் சிவன்கோவில்

சுன்னைக் கதிரமலைச் சிவன் கோயிற் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் புதன்கிழமை (10-4-74) வேத சிவாகம விதிப்படி மிகு சிறப்பாக நடைபெற்றது. 'கிரியா கலாப மணி' சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையிலே விளங்கிய இவ்வைபவத்தில் பக்தர்கள் பன்னூற்றுக்கணக்கானோர் வழிபாடியற்றினர். சமய தீட்சை சிவ தொண்டர் திரு க. கனகராசா அவர்களின் உபயமாக நிகழ்ந்தது.

வழக்கறிஞர் திரு த. தம்பிரத்தினம் அவர்களின் உதவியுடன் பல சிரமதானத் தொண்டர்கள் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.

## புத்தாண்டு உற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் ஆனந்த வருடப் பிறப்பு உற்சவம் எதிர்வரும் 13-4-74 சனிக்கிழமை மாலை 6-00 மணி முதல் நடைபெறும்.

மாலை 6-00 மணிக்கு சாயங்காலப் பூசை, 6-30 மணிக்கு கந்தபுராண பாராயணம் [தெய்வயானை யம்மை திருமணப் படலம்], 7-30 மணி விசேட அபிஷேக ஆராதனை, 8-00 மணி நாமஜெப பாராயணம், 8-15 மணி கூட்டுப் பிரார்த்தனை, 9-50 மணி வருடப் பிறப்பு விசேட பூசை, 10-00 மணி உற்சவம். (உள் திருவீதி)

## எண்பத்தாறும் ஆண்டின் ஆரம்பம்

இதுவரை எத்தனையோ புத்தாண்டுகள் பொலிந்தன — 'இந்துசாதன' நங்கை இன்னமும் இளநகை பூத்த எழில் அணங்கே



எண்பத்தாறும் எழில் மடலில் இரண்டாம் இதழிலே இந்துசாதன நேயர்களுக்கு ஆநந்த ஆண்டு வாழ்த்துக்களைப் பண்பாகச் சமர்ப்பிக்கின்றோம்.



ஆண்டுகள் பல ஆயின், ஆயினும் மீண்டும் மீண்டும் இந்துசாதனம் வேண்டிய சாதனமாகவே விளங்குகின்றது. என்னை, எம்முன்னோர் இறைவழிபாட்டில் நின்ற உத்தமத் தொண்டர்கள், நற்றமிழ் நாவலர் காட்டிய வழியில் உற்ற உணர்ச்சியுடன் நிற்பவர்களாய்ச் சேவை செய்தனர்.

அவ்வழி மெய்வழியென யாமும் பின்றொடர்ந்து நிற்கின்றோம்.

## போற்றுவஞ் சிவனை புத்தாண்டு பொலிக.

உ

"இறை — ஒளி"

வம்மின் மக்காள், வளம்பொலி புத்தாண்
டெம்முன் தோன்றும் எழில்கனி காண்போம்.
சித்திரைச் சங்கிராந் திப்பெரு நாளாம்
அத்திறன் நோக்க அனைவரும் வாரீர்.
தானந் தமில்லாத் தனிமுதல் அருளால்
ஆநந் தநாம ஆண்டு கலியுகம்
மீண்டும் மீண்டும் விளங்குவ துண்மை.
யாண்டும் உயிர்கள் யாவும் சிறப்புறப்
புத்தாண் டிம்முறை புனிதமா மமைய
எத்தால் வாழலாம் என்றே எண்ணுவம்.
அவனன் றியொன்றும் அசையா தெனவே
சிவனெம் சிந்தை திகழப் போற்றுவம்.
அன்பர் பணிசெய ஆளாய் அமைந்து
துன்பந் துடைத்துத் துயரம் நீக்குவம்.
எவ்வுயி ருமோங்க எண்ணி இயம்பிச்
செவ்வி தியங்கிச் சேவை செய்குவம்.
சைவந் துலங்கத் தமிழ்மொழி இலங்க
தெய்வச் சால்பு திகழப்
போற்றுவம் சிவனை. புத்தாண் டுபொலிக.

# சமய பாட நூலை யார் எழுதல்வேண்டும்?

## இந்துமாமன்றத் தீர்மானம்

சைவசமய வளர்ச்சிக்காக முன்னின்றுழைத்து வரும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியவற்றின் ஆலோசனையைப் பெற்று சைவ சமய நம்பிக்கை — அறிவு — ஆசாரம் — அனுபவம் — ஒழுக்கம் ஆயயாவும் நிரம்பப் பெற்றவர்களென இவற்றினை விதப்புரை செய்யப் படுபவர்களைக் கொண்ட சைவ சமய ஆலோசனைக் குழுவைக் கொண்டே பாடசாலைகளில் சைவ சமயம் கற்பிப்பதற்கு வேண்டிய பாடத் திட்டங்கள் வரைவிக்கப்படவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தனது 19-ஆவது ஆண்டுக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இந்து மாமன்றத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானம் ஒன்று கூறுவதாவது:

"இலங்கையின் புதிய அரசியல் அமைப்பில் இந்து மதத்திற்கு போதிய பாதுகாப்பும், அதன் வளர்ச்சிக்கு இடர் இல்லா உத்தரவாதமும் அளிக்குமாறு இந்நாட்டு இந்து மக்கள் சார்பில இலங்கை அரசை இம்மன்றம்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

# ஆனந்தப் புத்தாண்டு அளவிலா மகிழ்ச்சி தரும்

புத்தாண்டுப் பெருநாள் இம்மாதம் 14-ம் திகதி உலகின் பல பாகங்களிலும் ஆனந்தமாகக் கொண்டாடப்படும். பிறக்கவிருக்கும் வருடம் ஆனந்த வருடம். எனவே உலகில் அமைதி நிலவி ஆனந்தம் கூத்தாடும் என்று நம்ப இடமுண்டு.

இத்திருநாளை இலங்கையில் இந்துக்களும், பௌத்தர்களும் ஒருசேரக் கொண்டாடுகின்றார்கள். பௌத்தர்களுக்கும் இதுவே புத்தாண்டுத் துவக்கமாகும். தேசிய ஒருமைப்பாட்டுக்கு இந்நாள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

புதுவருடத்தன்று அனைவரும் அதிகாலையிலே நித்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

சைவபரிபாலன சபையாதரவில் வழமைபோலத் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை, சித்திரைத் திங்கள் 5ஆம் நாள் (18-4-74) வியாழக்கிழமை சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும். சிவபூசை, அன்னம்பாலிப்பு, விரிவுரைகள் முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய பாடத்திட்டம்

**திலம்** என்ற பதத்திலிருந்து தைலம் என்ற சொல்லும் நிடதம் என்ற சொல்லிலிருந்து நைடதம் என்ற சொல்லும் உண்டாயினாற்போல சிவம் என்ற சொல்லிலிருந்து சைவம் என்ற சொல்லுண்டானது. சைவம் என்பது சிவ சம்பந்தம், ஆகவே சைவம் என்பது சிவசம்பந்தத்தை வழங்கும் மார்க்கமாகும். தாயுமானசுவாமிகள் சைவ சமயத்தின் மேன்மையை விளக்க "சைவசமயமே சமயமென்றருளினர்.

"அயர்வறச்சென் னியில்வைத்து ராஜாங்கத்தி லமர்ந்தது
வைதிக சைவ மழகி தந்தோ!"

எனவும் பிறிதோரிடத்தில் அவர் சைவ சமய மாட்சியை விதந்து கூறியுள்ளனர்.

புலோலி சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A. அவர்கள் தாம் எழுதிய சைவ சமய சாரம் என்ற சிறு நூலிற் கூறியதையும் நோக்குவாம்.

"நன் மார்க்கம் நாலு, அவை தாம் ஞான யோக நற்கிரியை சரியை என நவிற்றுவதும் செய்வர்" என்றார் அருணந்தி சிவம்.

மற்றைய சமயங்கள் இவ்வாறான படிகளொன்றுமின்றி எளிதிலே மோட்சத்தைத் தருவோம் என்கின்றன: அப்படியாயின் அவர்களுடைய மோட்சம் என்ன பெறும்! எல்லாவிதமான தீவினைகளையும் விளக்குவது சைவ சமயம்மாத்திரமேயாம். ஏனைய தீவினைகளோடு கள்ளுண்ணல் புலாலுண்ணல் கொலையாகிய மூன்றையும் விலக்குவது சைவ சமயம்.

புலாலுண்ணலைப் புத்தசமயம் விலக்கவில்லை. புலாலுண்ணலையேனும் கொலையையேனுய் இஸ்லாம் சமயம் விலக்கவில்லை. கள்ளுண்ணலையேனும் கொலையையேனும் கிறீஸ்து சமயம் விலக்கவிலை,

ஆன்மாக்கள் ஆணவமென்னும் வியாதியினாற் பீடிக்கப்பட்ட நோயாளிகள், என்றும அவைகள் செய்யும் பிழைகள யாவும் அந்த நோயினால் வருவன என்றும் அவைகள் இயல்பாயவ நல்லவை என்றும கடவுள் அந்த நோயைத் தீர்க்கும் வைத்தியநாதன் என்றும் அவர் ஆன்மாக்களுக்கு ஊட்டும் இனப துன்பங்கள் அந்நோயைத் தீர்க்கும் என்றும் சொல்வது சைவ சயயம ஒன்றேயாம்".

சைவசமயம் வேத சிவாகமங்களை இறைவனுடைய வாக்குகளாகக் கொண்டவை. வேதம் பொதுநூல், சிவாகமம் சிறப்பு நூல், சிவாகம சித்தாந்தம் என்றும் பொருளபடும். வேதம் — பசு அதன் பால் மெய்யாகமம்.

செய்வானுஞ் செய்வினையு மதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையனுன்காகும் விதித்தபொருளெனக் கொண்டே
யிவ்வியப்பு சைவநெறி யல்லவறறுக்கில்லையென
உய்வகையாற் பொருள் சிவனென் 'றருளாலே யுணர்ந்திருந்தார்"
— சாக்கியநாயனார் புராணம்.

சைவசமயம் விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம் ஆகிய மூன்றையும் சாதனங்களாகக் கொண்டது.

சிலதினங்களுக்கு முன் கொழும்பு இந்து மாமன்றத்தின் வருடாந்தக் கூட்டத்தில் சைவ சமய பாடத்திட்டம் சம்பந்தமாக ஒரு தீர்மானம் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக அறிகின்றோம். குறித்த பிரேரணையின் சாரம்: சைவசமய பாடத்திட்டத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை வரலாறு தவிர்க்கப்படவேண்டுமெனபதாகும. அப் பிரேரணையை மறுத்துச் சிலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். எங்கள் வைதிக சைவம் அநுபூதிநிலை கைவந்த மெய்ஞ்ஞானிகளால் வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் எங்கள் சமய குரவர் நால்வரும், அறுபத்து மூன்று நாயன்மார்களும், சைவ சித்தாந்த நூல்களைச் அருளிச் செய்த அகச்சந்தான குரவர் நால்வரும் புறச்சந்தான குரவர் நால்வருமாவர், இவர்களே எங்கள் சமய வழிகாட்டிகள். இராமகிருஷ்ண பரமஹம்சர் பெரும் மகான். ஆனல் அவருடைய பெயரால் தாபிக்கப்பெற்ற இயக்கம் வேத சிவாகமங்களை முதல நூல்களாகக் கொள்வதில்லை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் நாம் முற்காட்டிய சைவசமய நெறியையே போதித்து வந்தார். அதன்படி ஒழுகிவந்தார், மக்களைம் அந்நெறியில் ஒழுகச்செய்தனர். நம்நாட்டில் தமிழமக்களைப் பொறுத்த வரையில் நாவலர் பெருமானுடைய கொள்கையையே தமிழர்கள் பின்பற்றுதல் வேண்டும்.

***ஸ்ரீ இராமக்கிருஷ்ண இயக்கத்தைச் சார்ந்தவர்களை நாம்குறை கூறவில்லை! சமய சமரசம் பேசி, சைவ சமயச் சிறுவர்களுடைய சமயவறிவையும் சமய வாழ்க்கையையும் கலக்கமடையச்செய்தலைச் சைவப்பெற்றோர் ஏற்பார்களா? சைவ சமூகத்தின் மனக்கொதிப்பைப்போக்க அறிஞர்கள் உடனடி நடவடிக்கைகளை ஒருமித்து எடுத்தல் வேண்டும்.***

# திருக்கேதீச்சரத் திருப்பணி

திருகேதீச்சர ஆலயத்திருப் பணிச்சபைச் செயலாளர் திரு. இ. நமசிவாயம் அவர்கள் சைவ மக்கள் யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக் கூறித் தெரிவிக்கும் செய்தி.

"திருக்கேதீச்சரத்தில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் கர்ப்பககிரகமும் அர்த்தமண்டபமும் சிவாகமமுறைப் படியும் சிற்பசாத்திர முறைப்படியும் கருங்கல்லினால் உத்தரவரிவரை கட்டியுள்ளோம் மூலத்தன விமானங்கள் விரைவில் கட்டப்படும் நிலையிலிருப்பதை உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் இவைமுடிந்த பின் மகாகும்பாபிஷேகம் நிகழவிருக்கின்றது. வேலைபூர்த்தியாக விமானங்களைகட்டி முடிப்பதற்கு 100000/- ரூ. வரை நிதிவேண்டியுள்ளது. இன்றியமையாது வேண்டப்படும் மகாமண்டபம் நிருத்த மண்டபம் சுவாமிசந்நிதி இரண்டாம் பிரகார இராசகோபுரம் அம்பாள் சந்நிதியின் முதலாம் இரண்டாம் பிரகாரக் கோபுரங்கள் ஆறுமுகப்பெருமான் கோயிலாதியன அமைப்பதற்கும் மேலும் தேர்கள், சப்பரங்கள் வாகனங்கள் ஆகியன செய்விப்பதற்கும் நால்வர் சேக்கிழார் கேது அறுபத்து மூன்று நாயன்மார் ஆகியோருக்கும் திருமுறைகளும் குறடுகள் கட்டுதற்கும அறுபத்து மூவர் விக்கிரங்கள் உலோகத்திற் செய்வித்தற்குமாக இன்னும ரூபா 800000 வரை தேவைப்படுமென மதிக்கப் பட்டுளளது சைவர்கள் யாவரையும் இம்முக்கிய திருப்பணிக்கு நிதியுதவுமாறு பணிவுடன் வேண்டுகின்றேம"

நன்கொடை அனுப்பும்விலாசம்:

திருக்கேதீச்சர ஆலயத்திருப் பணிச்சபை சரசுவதிமண்டபம்
75 லோறன்சு வீதி
கொழும்பு 4

# சைவ மாண்பு

[ சித். சிவரத்தினம் ]

அநாதி பகவனாகிய பரமசிவனால் அருளிச்செய்யப்பட்டது சைவசமயம். பரமசிவனாரவர் அநாதி சித்தமூலமல பெத்த பசுக்களாகிய ஆன்மாக்கள் மேல் வைத்த பெருங்கருணையினாலே, பஞ்சசததிருப பஞ்சமந்திர தநுமாகிய சதாசிவனாய், பிரமமகாசிருஷ்டி யாரம்பத்திலே முதனூலாகிய சுருதியை அருளிச்செய்தார். சுருதியாவது பரமாப்தரால் உபதேசிக்கப்பட்ட பாரமார்த்திக வாக்கியமாய், ஆன்மாக்களுக்குப் புத்தி, முத்தி சாதகமாயய ஞானத்தைப் போதிக்குஞ் சாத்திரமாம். அந்தச் சுருதி சாமானிய விசேஷ பேதத்தால், வேதம், ஆகமம் என இரண்டு விபாகமாய் இருக்கும்.

அவற்றுள் வேதமானது இருக்கு. யசுர், சாமம், அதர்வம் என நான்காம். இவை அற்பச் சுருதி வாக்கியம், பிரபலச்சுருதி வாக்கியம் என இருபகுதிப்படும். அவற்றுள் அற்பச் சுருதிவாக்கியம் கர்மானுட்டானக் கிரமங்களைச் செரல்லும். பிரபலச் சுருதி வாக்கியம் அத்தியான்மீக ஞானத்தைச் சொல்லும். இது முப்பத்திரண்டு உபநிஷத்தாய் இருக்கும். இவ் வேதங்களுக்கு வழிநூல் சைவம் முதலிய புராணங்களும் ஸ்மிருதிகளுமாம், சார்புநூல் கற்பசூத்திரம் முதலிய அங்கங்களாம்.

ஆகமம் இருபத்தெட்டாம், இவ்வாகமங்கள் மாந்திரமெனவும், தந்திரமெனவும் சித்தாந்த மெனவும் பெயர் பெறும், இவை சதாசிவனார் அநந்தேசுரருக்கும், அநந்தேசுரால ஸ்ரீ கண்டருக்கும, ஸ்ரீ கண்டரால் தேவர்களுக்கும, தேவர்களால் முனிவர்களுக்கும். முனிவர்களால் மானுடருக்கும் உபதேசிக்கப்படும். இங்ஙன மூபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம ஆறும், முறையே பரசம்பந்தம், மகாசம்பந்தம், அந்தரான சம்பந்தம் திவ்விய சம்பந்தம் ஒரு சொல் எனப் பெயர் பெறும். இவ்வாகமங்கள் தனிதனியே, ஞானபாதம், யோகபாதம கிரியாபாதம் சரியாபாதம் என நான்காம் அவற்றுள்ஞானபாதம், பதி. பசு பாசம் என்னும் முப்பொருள்களின் ஸ்வரூபத்தையும் யோகபாதம் பிராணாயாமம் முதலிய அங்கங்களோடு கூடிய சிவ யோகத்தையும, கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம் சந்தியாவந்தனம் பூசை செபம், ஓமம் என்பனவற்றையும் சமய விசேட நிர்வாண ஆசாரியாபிஷேகங்களையும் சரியாபாதம் உபதேசிக்கும் இவ்வாகமங்களுக் வழி நூல் நாரசிங்கம் முதல் விசுவான்மகம், ஈறுகிய உபாகமங்கள் இருநூற்றேழாம். சார்பு நூல இரத்தினத் திரயம், மோக்ஷகாரிகை பரமோட்ச நிராசகாரிகை முதலிய பிரகரணங்களாம். இச்சாத்திரங்களெல்லாம் மூலபாஷை யாகிய சமஸ்கிருதத்தில் உள்ளன.

(வளரும்)

# கோட்டு விற்பனவு விளம்பரம்

அருணாசலம் தம்பிப்பிள்ளை நெடுங்காடு, காரைநகர் வடக்கு
எதிராக —வழக்காளி
1. வேலுப்பிள்ளை முத்துத்தமபி 484/12 Blumendal Road, Colombo 15
2 மனைவி இராசாத்தி அம்மா அல்லது முததுலட்சுமி வட்டுக்கோட்டை மேற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M.B 12121-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுககாணியை 1974-ம் ஆ சித்திரை மாதம் 29-ம திகதி (29-4-74) திங்கட்கிழமை முற்பகல 10 மணி தொடககம அந்தக் காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை: முதல் வட்டி ரூபாய் 18684-84ம் 31-8-70 தொடககம 6-10-71 வரைகதும் ரூபாய் 13800/-க்கு 10 வீத வட்டியும அதன்பின் முழுததொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 569-83 இதில் ரூபாய் 200/- 12-12-72 இல் கொடுபட்டது செலவில், பின் 17—5—72ல 5000/- ரூபாவும் 6—6—72ல் 4000/- ரூபாவும் 19—6—73ல 500/- ரூபாவும் கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு வட்டுககோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை ஆலடிப் பாப்பு நிலலாச்சம (8) எட்டு இதில் மேற்குப் பக்கம் பிறிவிடுதல் செய்யப்பட்ட காணி பரப்பு நிலலாச்சம 4 குளி 1 நான்கு லாச்சம் ஒரு குளி) வீடுகளும் கிணறும் தென்னைகளும் செய்பயிர் வானபயிர்களும் இதனெல்லை கிழக்கு கதிர்காமர் மாணிக்கப்பிள்ளைககும் பண்சாதிககுரியவாதனம், வடக்கு கார்த்திகேசு சபாபதிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு நடராசா தருமலிங்கததிற்கும முருகா நல்லதமபியின் உரிமையாளருக்குமுரியவாதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

"கமலபதி" — மு. நவரத்தினராசா.
மண்டைதீவு, — கொமிசனரும் விலமதிப்பாளரும்.
26-3-74 — 13 12-4-74

# கோட்டு விற்பனவு விளம்பரம்

டில்லிமலர் வல்லிபுரம் உடுவில். —வழக்காளி
இல M B 13166, எதிராக
மருதப்பு கார்த்திகேசு, சஙகுவேலி, உடுவில் —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 13166-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனல் விபரிககப்படும் துண்டுக் காணி 1974 ம் ஆ சித்திரை மீ 26 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள நினறு பிரசித்த ஏலததில் விற்ககப்படும்.

தீர்வைத் தொகை; முதல் வட்டி ரூபாய் 2087-50ம் 9-6-[illegible] தொடக்கம் 5-12-72 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுததொகைக்தும இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 373 - 69

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில கோவிற்பற்று உடுவில் இறை 'பெத்தா தோட்டம' நில. 8¼ (எட்டேகால்)லும் கிணறும், செய்பயிர் வான பயிரும் இதறகு எலலை கிழக்கு: முத்தையா கந்தசாமியின் ஆதனம, வடககு: கதிரித்தம்பி மகள அன்னமுத்துவின் ஆதனம், மேறகு: ரோட்டு, தெறகு: ஒழுங்கையும, மனுவல் செல்லனின் ஆதனமும, இதடஙகலிற சொரியலாய் பதினறில் (3/16, மூனறு பங்கு அதற்கு சேர்நதவைகளும.

"கமலபதி" — மு. நவரத்தினராசா
மண்டைதீவு, — கொமிசனரும், விலமதிப்பாளரும்
11. 5 - 4

# கோட்டு விற்பனவு விளம்பரம்

1. அம்பலம் வேலுபபிள்ளை, பெண்
2. சிவகாமசுந்தரவெல்லி,
இருவரும பன்னாலை, தெல்லிப்பளை —வழக்காளிகள்
இல: M B 12860 எதிராக
அம்பலவாணர் கதிர்காமத்தம்பி பெண்
திலகவதி இருவரும் தெல்லிப்பளை தென்மேற்கு, தெல்லிப்பளை. —எதிராளி

யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் M B 12860 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1974ம் ஆ வைகாசி மாதம் 15ம திகதி (15-5-74) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 6931ம், 3—12—1970 தொடக்கம் 21-9 1972 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும வரை 5வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 512-97 செலவில் ரூபாய் 125 குறைக்கப்படவேண்டும், மேலும் ரூபாய் 1690 குறைக்கபபடவேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை தென்மேற்கு இறை "நெல்லோலை" (Nallallai) பரப்பு நிலலாச்சம 4 குழி 15 பனைகளும் தென்னைகளும் இதற்கு எலலை கிழக்கு சபாநாயகம பெண் வள்ளிப்பிள்ளைக்கும மறுபேருக்குமுரியவாதனங்கள், வடக்கு சங்கரப்பிள்ளை பெண் வேதநாயகத்தின் உரிமையாளரினாதனம், மேற்கு கதிரிப்பிள்ளை சோதிநாகரத்தினத்தின் ஆதனம், தெற்கு கதிரிப்பிள்ளை சோதிநாகரத்தினத்திற்கும துரவை நிலமும எதிராளிகளுக்குச் சாந்தமான ஆதனமும், இதடங்கலும். அத்துடன் தெறகுப் பக்கமாக 9 குழி உள்ள பொதுத் துரவையில் மூன்றிலொரு பங்கும் அததுடன் இணற்றுப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் மேலும் இக்காணியிலிருநது தெற்கெல்லையில் இருக்கும் ஒழுங்கைக்குப் போக்குவரவு செய்யக் கிழக்குப் பக்கமாகப்போகும் 5 முழ அகலமான ஒழுங்கையைப் பாவிக்குமுரிமையும் பதிவிலககம H 314/219

"கமலபதி" — மு. நவரத்தினராசா
மண்டைதீவு — கொம்மிசனர் & விலமதிப்பாளர்
12. 12—4

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

நாசப்பர் கிருஸ்ணர் அச்சுவேலி வடக்கு அச்சுவேலி வழக்காளி
இல. M. B. 12807 எதிராக
1. குழந்தையன் செல்லன்
2. பெண் சிவமணி அச்சுவேலி வடக்கு அச்சுவேலி எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 12807ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1974 ஆண்டு ஆனி மாதம் 7ந் திகதி (7-6-74) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதலும் வட்டியுமாக 2,221/50 இன்னும் ரூபா 1500/-ற்கு 30-10-71 தொடக்கம் 19-12-72 வரைக்கும் பத்து 10 % வீதவட்டியுங் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 19-12-72 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும் வரைக்கும் 5% வீதவட்டியுங் கோட்டுச் செலவு 414/20 ஏற்பட்ட செலவு 267/70 வெலியாத்துச் செலவு 83/75 இனிமேலேற்படுஞ் செலவு 62/75)

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலி கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று அச்சுவேலி வடக்கிறை "வான்பிட்ட புலம் பர. நில லா 17 குளி 14 இதில் நடுப் பெற பர நில லா 1குளி 9 வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு முருகன் சுப்பனும் பெண் வள்ளியினுதனம் வடக்கு சின்னவன் தம்பனினுதனம் மேற்கு கந்தன் பண்டாரிக்கும் மறுபேருக்கு முரியவாதனம் தெற்கு சந்தன முருகனுக்கும் பெண் மருதிக்கு முரியவாதனம் இதடங்கலும் வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் இதற்குரிய கிணற்றிற் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் ரோட்டுக்குப் போகக்கிழக்கெல்லைக்காணிக் கூடாகப்போகும் ஒழுங்கைப் பாவிப்புருத்தும.

தா. க. பொன்னுத்துரை J. P
கொமிசனரும் விலைமதிப்பாளரும்

அகிலகம்"
28/1 யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
29—3—74

7- 12 4-74

## கோட்டுக் விற்பனவு விளம்பரம்

சங்கானை மேற்கு
1. இராமலிங்கம் குமாரசாமியும் பெண்
2. மனோன்மணியும் —வழக்காளிகள்

வழ, இல. M.B. 11190 எதிராக

தொல்புரம்
1. ஆறுமுகம் துரைராசசிங்கமும்
2. சிவக்கொழுந்துவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 11190ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் ஆ வைகாசி மாதம் 16ம் திகதி (16-5-74) வியாழக்கிழமை காலை 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபாய 2625/-ம் 15-10-69 தொடக்கம் 16-1-70 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 10 வீத வட்டியும், அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 352-22 சதமும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரம் இறை, நி. ப, 8 குளி 6 ம் பயிர்களும் கிணறும், காணிப் பெயர் "தாமரைப்பிட்டி" (Thamaraipiddy) எல்லை கிழக்கு சுப்பிரமணியம் நாகநாதருக்கும் பெண் நாகசப்பிள்ளைக்குமுரிய ஆதனம், வடக்கு பெரியார் மார்க்கண்டுவுக்கும் குழந்தையர் செல்லப்பாவுக்குமுரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும், மேற்கு நாகநாதர் சின்னத்தம்பிக்கும், சின்னத்தம்பி பெண் சின்னத்தங்கச்சிக்கும், சின்னத்துரை பெண் பாக்கியத்துக்குரிய ஆதனங்கள், தெற்கு ஒழுங்கை இதடங்கலும். யாழ்ப்பாணம் காணிப் பதிவுக்கந்தோரில 224/88 ல் பதியப்பட்டது.

மல்லாகம்.
செ பாண்டித்துரை
10-4-74. 14 12-4
கொமிஷனர், விலைமதிப்பாளர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்: வழ: இல. M.B. 12448
167/1, கோவில் வீதி நல்லூர் யாழ்ப்பாணம் 1. நாகமுத்து தர்மலிங்கமும் பெண் 2 இரத்தின சௌந்தரியும்
எதிராக வழக்காளிகள்
196/8, 1-ம் ஒழுங்கை அரசடி வீதி வண்ணார் பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம் 1 வைரவித்தம்பி முத்துவும் பெண் 2. இராசமணியும் 3. வெள்ளையா கந்தையா கைம்பெண் சின்னச்சி எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12448ம் இலக்க வழக்கு எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் ஆண்டு வைகாசி மாதம் 21ம் திகதி (21-5-74) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 1697/-ம் 29-4-71 தொடக்கம் 22-9-71 வரைக்கும் ரூபா 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 301-80 சதமும்

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை 'நீர்நொச்சியடியும் கட்டைக்காடும்' (Neernochchiady and Kaddaikadu) நி. ப. 1 குளி 5ம் அடுப்படியும் பயிர்களும் அதிலிருக்கும் கிணற்றில் பங்கும் மற்றும் அதற்குரிய உடமைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு அம்பலவி குமாருவின் ஆதனம், மேற்கு V. மாணிக்கத்துக்கும் S. லெட்சுமிக்குமுரிய ஆதனம். தெற்கு ஆறுமுகம் மார்க்கண்டு பெண் பாக்கியத்தின ஆதனம், இதடங்கலும். D 316/151 ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை

மல்லாகம்.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
11-4-74
Commissioner ofSales & Valuer

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ, இல. M. B 13756

1 சின்னத்தம்பிப்பிள்ளை தியாகராசாவும் பெண் யசோதராவும், 2', நல்லூர் குறுக்கு ரோட்டு, யாழ்ப்பாணம், — வழக்காளி

எதிராக

(1) தம்பு குணமணியும் பெண் (2) பவளமும் இராமநாதன் வீதி, நாயன்மார்காடு, நல்லூர். — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 13756 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1974 ம் ஆண்டு வைகாசி மீ 20-ம் திகதி (20-5-74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை;— முதல் வட்டி ரூபா 6900/-ம் 9-4-73 தொடக்கம் 28-9-73 வரைக்கும் ரூபா 5000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 175/ -

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம், சுண்டிக்குழி கோயிற்பற்று சிவியாதெரு இறை "ஓடைப் புலம்" எனனுமகாணி நில பர 4, 5/16ம் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வாய்க்காலும், எல்லை கிழக்கு பளனி செல்லனினுதனம். வடக்கு சபாபதி வயிரமுத்துவின் உரித்தாளரின் ஆதனமும். மேற்கு ரோட்டு தெற்கு ஆறுமுகம் பெண் அன்னலெச்சுமியினுதனம்: இதடங்கலும். (D 98/438)

இ கனகரத்தினம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
நம் 35/2, கொழும்புத்துறை வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

6 12-4.74

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

இல M B 134 3
1. நடராஜா மகாதேவன்
2 பெண் வசந்தா பொற்பத்தை வீதி, கொக்குவில் யாழ்ப்பாணம்
—வழக்காளிகள்

எதிராக

1. கந்தையா கைம்பெண் இராசம்மா 2. நடராசா நல்லதம்பி 3. பெண் நாகேஸ்வரி 1/4 பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை நல்லூர், யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 13433ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, 1974ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் திகதி (31-5-74) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கீழே விபரிக்கப்படும் ஆதனம், அவ்வாதனத்துக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதலும் வட்டியுமாக ரூபாய் 13,050/- இன்னும் ரூபாய் 10,000/-ற்கு 11-10-72—29-3-73 வரைக்கும் 12 வீத வட்டியுங் கூட்டிக் கூடிய தொகைக்கு 29-3-73 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச்செலவு 709-51 சதம் ஏற்பட்ட செலவு 418-03 வெலியாத்துச் செலவு 158-25 இனிமேலேற்படுஞ்செலவு 133-23)

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டமும் பகுதியும் நல்லூர் கோவிற்பற்றும் இறையும் 'பண்டாரக் குளம்' மறு பிரிவுகளும் பா நெல் லா 10 (பத்து) வான பயிர் செய்பயிர்களும் கிளக்கெல …… ஒழுங்கை கிணற்றுப் பங்கும் வீடும் குசினியும் மற்றும் இக்காணிக்குளிருக்கும் சகலதும். எல்லை கிழக்கு ஆறுமுகம் செல்லப்பாவினுதனம். வடக்கு A S N சுப்பையாவின் மகள் புவனசவுந்தரிக்குரியவாதனம். மேற்கு ரோட்டு தெற்கு அப்புத்துரை அருந்தவநாதனின் பெண் கனகமாவிற்குரியவாதனம் இதடங்கலிற் சொரியலாய் ஆறிற்பங்கு (ஆறு) 6 அதற்குச் சேர்ந்தவைகளும.

தா. க. பொன்னுத்துரை J P.
கொமிஷ்னர் & விலைமதிப்பாளர்
'அகிலகம்''
8/1. யாழ் ரோட்,
யாழ்ப்பாணம்.

19 12-4-74

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

யோன்பிள்ளை கைம்பெண் அந்தோனிப்பிள்ளை
கரையூர். யாழ்ப்பாணம் — வழக்காளி
ஈடு/5151 எதிராக

அந்தோனிப்பிள்ளை கைத்தியம் பிள்ளை கைம் பெண் மாரியபிள்ளை கரையூர் யாழ்ப்பாணம் தற்போது சிங்கப்பூர் இவர் காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை கைத்தியம்பிள்ளையின் ஆதனங்களுக்கு நியமிக்கப்பட்ட தத்துவகாரன்
1. சந்தியாப்பிள்ளை பிலிப்புப்பிள்ளை இன்னாசிமுத்துவும்
2. பெண் மேரீ றெஜினா இருவரும் பெரியதெரு, யாழ்ப்பாணம். — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு/5151 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு ஆனி மீ 10ம் திகதி (10—6—74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய 2,742/-ம் 10—10—62 தொடக்கம் 19—8 - 63 வரைக்கும் ரூபாய் 1,500/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 414 - 15 சதம்

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை 'புள்ளன் தறை' நிலப்பரப்பு (2½) இரண்டரையும் அதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு வயித்தியாம்பிள்ளை அவிருன்பிள்ளையின் உரிமைக்காரரினுதனம், மேற்கும் தெற்கும் செனற் யேப்ஸ் கோவிலுக்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாய் (1/3) மூன்றிலொரு பங்கு அதற்கு சேர்ந்தவைகளும்,

சி. செ. பாலசிங்கம்
அராலி வடக்கு
கொமிஷனர், விலைமதிப்பாளர்
வட்டுக்கோட்டை, 7-4-74.
10 12-4

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மாணிக்கம் வைரமுத்து. உடுவில் —வழக்காளி
வழ. இல, ஈடு/13349 எதிராக
1. சி. ஆழ்வான் கைம்பெண் கற்பகம்
2. ஆ. செல்லத்துரை (குறித்த செல்லத்துரை காலஞ்சென்ற ஆழ்வானுடைய ஆதனங்களுக்கு நியமிக்கப்பட்ட 2-ம் பிரதிவாதி. உடுவில் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு: 13349ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ம் திகதி (27-5-74) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2,716/-, 31-8-72 தொடக்கம் 15—5 –73 வரைக்கும் ரூபாய் 2,000/-க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் சேலவு ரூபாய் 486-90 சதம்

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவிற் கோவிற்பற்று உடுவிலிறை வேலன் வளவும் பாப்பா தோட்டமும் பர நி. 4½ இதில் கிழக்குப் பக்கமாகச் சீதனம் கொடுத்த பர. நி 3ம் நீக்கி மிகுதி பர. நி. 1½, கிழக்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும் இதற்கு எல்லை கிழக்கு கிருஷணர் இராசதுரைக்கும் பெண் தெய்வானைக்குமுரிய ஆதனம, வடக்கு ஒழுங்கை மேற்கு கணபதி அப்பையாவினுதனம், தெற்கு வல்லிபுரம் பெண் தெய்வானையினுதனம், இதடங்கலும்

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
2-4-74
சி செ. பாலசிங்கம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
9, 12-4

## கந்தபுராணப் படிப்பு

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயிலில் கந்தபுராணபடனம் சிறப்பாக நடைபெறுகின்றது. சைவப் பெரியார் திரு. கி, தம்பியையா அவர்கள் புராண விரிவுரை நிகழ்த்தி வருகின்றனர். சென்ற பங்குனி உத்தரத்திலன்று பார்வதியம்மையார் திருக்கலியாணப் படிப்பு நிகழ்ந்தது.

## தம்பிரான் சுவாமிகள்

நல்லை ஞானசம்பந்தர்ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தமிழகத்தில் சமயப் பிரசாரச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாளை 13 உ சனிக்கிழமை மாலை ஈழம் திரும்புகின்றார்கள். (ந, நி,)

## மீண்டும் தலைவரானர்

கிழக்கிலங்கைத் தாளைக் கூட்டுத் தாபனத்தின் தலைவராக மீண்டும் திரு. கே. சி, தங்கராசா அவர்கள் நியமிக்கப்பெற்றுள்ளார்.

## 300 இலட்சம்

புதிய சம்பளத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு மேலும் 300 இலடசம் ரூபா தேவைப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருட விடுமுறை

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு சைவப் பிரகாச அச்சியந்திரசாலை, இந்துசாதனம், Hindu Organ, சைவ பரிபாலன சபை ஆகியவற்றின் அலுவலகங்களுக்கு 13—4—74 முதல் 17—4—74 வரை விடுமுறை நாட்களாகும். 17—4—74 புதன்கிழமை இரவு 7-48 மணி முதல் 8-06 மணிக்குமிடையில் வரும் சுபநேரத்தில் கருமாரம்பம் நிகழும். 19—4—74 வெள்ளிக்கிழமை மட்டும் இந்துசாதனம் — Hindu Organ வெளிவரமாட்டா.

— அதிபர்


திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிரமாதீசஹூ பங்குனி மீ ௨௰-௨ வெள்ளிக்கிழமை [1974]


## ஆநந்தம் ஆகின்றது

சித்திரைத் திங்கள் ஆரம்பமாகின்றது. சீரும் சிறப்பும் செம்மையும் கூட வருகின்றன என்ற சிந்தனையுடன் மேட இராசியில் மேவும் இரவியை மக்கள் மங்கள மனத்துடன் வரவேற்கின்றனர்.

புத்தாண்டுக்கு நல்லதோர் நாமத்தைச் சோதிட வல்லுநர்கள் புனைந்திருக்கின்றனர். ஆனந்த ஆண்டு அமைகின்றதே. ஏனிந்தச் சஞ்சலம் என்று பிரமாதீச மறையும் பொழுது யாவரும் மனத்திடங் கொள்கின்றனர். 'ஒரு குறையும் இல்லை' 'எப்பொழுதோ முடிந்த காரியம்' ஆகையால ஆநந்தமாக நாம் வாழ்வதற்குத் தானந்தமில்லாத் தன்மையனின் பெருங் கருணைப் பேறே வேண்டும்.

'சலம்பூவொடு தூபமும், தமிழோடிசை பாடலும், நமச்சிவாய நாமமும், நாதன் கன்னினைவும், நாளிலும் பொழுதிலும் இவற்றை நாம் மறவாதிருந்தால ஆநந்தத்துக்கென்ன குறை?

எனவே. பொய் புகலன்மின், புலன் வழி புகாதிருமின், வெகுளி விலக்குமின், கொலையும், களவும், கொடிய கள்ளும் காமமும குருநிந்தையும் தவிர்மின்!

ஆநந்தத் தேனருந்த அரிய திருவாசகம் தந்த திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்த,

'புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்(டு)
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனிஓர் இடையூறு அடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே."

பொன் மொழியை நினைவு கூர்ந்தால் எங்கெழில் என் ஞாயிறு!

சைவநெறி தரும் தைரியம் இதுவே, நல்ல கதிக்கு யாது குறை? தெய்வ சிந்தனையுடன் செய்கருமம் ஆற்றும் திடம் வேணடும். உய்ய வழி காட்டும் உண்மை நெறியிதுவே.

பொய்யும், போலிவேடமும், புன்மையும், போகும் ஆணடுடன் போகட்டும்.

மெய்யும் மேன்மையும் மேல்வரும் ஆண்டுடன் விளங்கட்டும்.

வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் ஆனந்த ஆண்டு அமைய வேதமுதல்வனை விண்ணோர் தலைவனைப் பாதந்தொழுவோம். நாதன் நாமத்தை நவில்வோம். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று வாழ்வோம்.

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் சித்திரைத் திங்கள் 9ம் நாள் (22-4-74) திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது 5-5-74 ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும். 6-5-74 தீர்த்தோற்சவமும், 7-5-74 பூங்காவன உற்சவமும் நிகழவிருக்கின்றன.

## சமய பாட நூலே

1ஆம் பக்கத்து வளர்ச்சி

ஏலவே கேட்டுக்கொண்டமைக்கு எத்தகைய நடவடிக்கையும் எடுக்காததையிட்டு இக் கூட்டம் தனது விசனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது"

மேலும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

"இந் நாட்டில் உள்ள தமிழ் இந்துக்கள் நூற்றுக்கு நூறுவிதமானோர் சைவ சமயத்தவர்களாகவும், சைவ சித்தாந்த தத்துவத்தைப் பின்பற்றுபவர்களாகவும் இருப்பதனால்; அடிப்படைக் கொள்கைகளில் சிற்சில வேறுபாடுகளையுடைய மற்றுஞ் சமயங்களையும் சேர்த்து பொதுப் பெயராகக் கூறப்படும் இந்து சமயம் என்ற பெயருக்குப் பதிலாக நம்பிக்கைக்குப் பொருத்தமான பெயராகிய சைவ சமயம் என்கின்ற பெயர் பாடத்திட்டத்திலும் பாட நூல்களிலும தமிழில் இடம்பெற வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கின்றது."

## ஆனந்தப் புத்தாண்டு

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

திரைவிட்டு எழுதல்வேண்டும். புண்ணிய மருத்துவநீராகிய "மருத்து நீரினை" தேய்த்து முழுகி தங்கள் காலைக் கடனகளை முடித்தல் வேண்டும். பின்னர் புத்தாடைகளை அணிந்து ஆலயம் சென்று கடவுள் வழிபாடு செய்தல் அவசியம். வீட்டில்உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து அறுசுவையுடன் கூடிய உணவை அருந்துதல வேண்டும். இன்று நாட்டில் பஞ்சம் இருப்பினும ஆனந்த வருடத்தில் இது நீங்கிவிடும் என்று நம்ப இடமிருக்கின்றது. இயற்கையின் ஒத்துழைப்பு என்றுமில்லாத அளவு இன்ற நமக்கிருக்கின்றமை மகிழ்ச்சி தருவதன்றோ!

சந்திரா இரகுபதி
கனகரெத்தின
ம. ம, வித்தியாலயம்.

## சமய தீட்சை

சுழிபுரம் பெரியதம்பிரான் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் சடந்த 5-4-74 வெள்ளிக்கிழமை அன்று சுமார் ஐம்பது பேர் சமய தீட்சை பெற்றார்கள்.

ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று இவ்வாலயத்தில் சமய தீட்சை நடைபெறுமென்று இச் சமய தீட்சையைப் பெறுமாறு [illegible] அறிவித்துள்ளார்கள்.

## 'ஆசையை அடக்குவதே அமரத்துவத்திற்கு வழி'

### வெயிலுகந்தவிநாயகர்கோவிற் திருவிழாவில் திரு. பிர. பாலகிருஷ்ணன் உரை

"ஆசை வளர வளர மனிதனின் தேவைகள் கூடுகின்றன தேவைகள் கூட அவற்றை அடைவதற்கு மனிதன் அறமல்லாத பல வழி முறைகளைக் கைக்கொள்ளநேர்கிறது, இதனால் விளையும் அனர்த்தங்கள் எண்ணிலடங்கா. எனவே அநாவசியமான ஆசைகளை மனநிலத்திலே விளைவதற்கு இடமளிக்காமல், மனத்தைத்தூய்மைசெய்தல் வேண்டும். இதற்கு வழி இறைவணக்கமேயாகும்"

இவ்வாறு அண்மையில் யாழ். நாயன்மார்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோவில 7ம் நாள் உற்சவத்தின்போது உரையாற்றிய சுவாமி பிரபாலகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

இவரின் சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு, யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அதிபர் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமை தாங்கினார். சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரின் 'அம்பாள் வில்லிசைக் குழு வினரால் "பக்த கௌரி' சரிதை வில்லிசையாக நிகழ்த்தப்பெற்றது

[ தொகுத்துதவியவர் : 'நாயன்மார் — நாதன்' ]

## புதுவருடப் பிறப்பு விழா

### யாழ்ப்பாணம் சிறைச்சாலை முருகன் கோவிலில்

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு 14—4—74 ஞாயிறுக்கிழமை காலை 9 மணிக்கு விசேட பூசையும், அதனைத் தொடர்ந்து நாமஜெப பாராயணம், நற்சிந்தனை நடைபெறும். சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் 'திருவருள்' என்னும் பொருள் பற்றி உபந்நியாசம் நிகழ்த்துவார்.

### கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலையில்

14-4-74 மாலை 2-30 மணிக்கு விசேட வழிபாட்டுடன் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் "மனித வாழ்வின் பயன" என்னும் பொருள்பற்றி உபந்நியாசம் நிகழ்த்துவார்கள்.

மேற்படி ஒழுங்குகள் சைவபரிபாலன சபை ஆதரவில் நடைபெறுகின்றன.

ഉ

### திருவிளையாடற் புராணப் படிப்பு

திருவருளை முன்னிட்டுச் சைவ பரிபலான சபை யாதரவில் 12-4-74 திங்கட்கிழமை திருவிளையாடற் புராணப்படிப்பு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழும்,

### காரைக்காலம்மையார் குருபூசை

சைவபரிபாலனசபையாதரவில் 8-4-74 திங்கட்கிழமை நடைபெற்றது விசேடபூசை காரைகாலம்மையார் புராணம் படிக்கப் பெற்றது

உ

### அறிவித்தல்

யாழ்ப்பாணம சைவபரிபாலன சபையாரால் ஆண்டுதோறும பாடசாலை மாணவர்களுக்காக அகில இலங்கை ரீதியில் நடாததப்பெற்று வரும் சைவ சமயபாடப் பரீட்சையில் பங்கு பற்றும் பாடசாலைகளுக்கு சபைப் பிரசுரமாகிய இந்துசாதனம கடந்த பங்குனி தொடக்கம் இலவசமாக அனுப்பப்பட்டு வருகின்றது. கிடைக்கப் பெருதவர்கள் அறிவிக்குமாறு கேடடுக் கொள்ளப்படுகின்றனர்

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்

### திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

பெரியபுலம் த க. பாடசாலை இந்துமாமன்றம் ஆதரவில், திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா 18-4-74 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். உபந்நியாசம், திருமுறை ஓதுதல் என்பன இடம்பெறும். "சைவ நெறி" என்னும் பத்திரிகையும் மாணவர்களின் கையெழுத்துப் பிரதியாக வெளியிடப்பெறும்.

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 12—4—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெறறது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மூ. மயில்வாகனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org